IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF,
THIRUMANGALAM.
O.S.No.334/2011
DEPOSITION OF WITNESS

பி.வா.சா.1 சாட்சி தேவதாஸ் த.பெ.ஜெயராஜ்

**Solemnly affirmed and sworn by Thiru.E.Manikandan, B.A.,B.L, Principal District Munsif (FAC) on 19.02.2026 in accordance with the provisions of Act XX141.**

வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :

1. எனது மனைவி இந்த வழக்கில் 1ம் பிரதிவாதி என்றால் சரிதான். தாவா சொத்து எனது மனைவி பெயரில் கிரையம் பெற்ற சொத்து என்றால் சரிதான். இந்த வழக்கு எதற்காக தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. எனது நிரூபண வாக்குமூலத்திற்கு விபரம் சொன்னது யார் என்றால் எனது சொந்தகாரர்கள் விபரம் சொன்னார்கள். 2006ம் ஆண்டு எனது மனைவி தாவா சொத்தை எவ்வளவுக்கு கிரையம் வாங்கினார் என்றால் தெரியாது.

2. இந்த வழக்கில் எதிர்வழக்குரை தாக்கல் செய்ததற்கு விபரம் சொன்னது யார் என்றால் தெரியாது. 25.06.2009ம் தேதி தாவா கிரைய ஒப்பந்தம் எனது மனைவி எழுதிகொடுத்துள்ளார்கள் என்றால் தெரியாது. மேற்படி வா.சா.ஆ. 1 கிரைய ஒப்பந்தத்தில் 1வதாக சாட்சி கையெழுத்து நான்தான் செய்துள்ளேன் என்றால் சரிதான். 25.06.2009 கிரைய ஒப்பந்தம் முன் பணத்தொகை ரூ.50,000/- வாதியிடமிருந்து எனது மனைவி பெற்றுக்கொண்ட விபரம் தெரிந்தும் வழக்கிற்காக தெரியாது என்று சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

3. கடந்த 22.05.2010ம் தேதி வாதிகள் என்னையும், எனது மனைவியையும் மீதி கிரைய தொகையை பெற்றுக்கொண்டு கிரையம் பதிந்து தரகேட்டபோது எனது மனைவியும் நானும் வேறு வீடு பார்த்து சில கால அவகாசம் கேட்டு தெரிவித்து நானும் எனது மனைவியும் வாய்மொழி மூலமாக நீட்டிப்பு செய்தோம் என்றால் சரிதான். 25.06.2011ம் தேதி ஒரு வழக்கறிஞர் மூலமாக ஒரு அறிவிப்பு அனுப்பினார்கள் என்றால் நோட்டீஸ் எதுவும் வரவில்லை. வாதிகள் கிரைய ஒப்பந்தப்படி மீதி கிரைய தொகை கொடுத்து கிரையம் முடித்து கொள்வதற்கு வாதிகள் எப்போதும் தயாராக விருப்பமாகவும் இருந்தார்கள் என்றாலும் எனது மனைவி பொய் சாக்குபோக்கு சொல்லி காலம் கடத்தி வந்தார் என்றால் சரியல்ல.

4. நான் கிரைய முன் தொகையை வாங்கி கொண்டு வழக்கிற்காக வாதியிடமிருந்து கடன் வாங்கியதாக நானும் எனது மனைவியும் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி இறந்துவிட்டதால் அவரது வாரிசாகிய நான்தான் கிரைய ஒப்பந்தம் மீதி கிரைய தொகையை வாங்கி கொண்டு கிரையம் பதிந்துகொடுக்க கடமைப்பட்டவன் என்றால் சரியல்ல. நான் பொய்யாக எதிர்வாதம் செய்கிறேன் என்றாலும் பிராது பரிகாரம் வாதிக்கு கிடைக்கதக்கது என்றாலும் சரியல்ல. நான் எனது நிரூபண வாக்குமூலத்தில் 3 தவணையாக கடன் பெற்றுள்ளேன் என்று கூறியுள்ளபோதும் அதற்கான தேதி குறிப்பிடப்படவில்லை என்றால் தேதி எனக்கு நினைவில் இல்லை. தவணையாக கடன் எதுவும் வாங்கவில்லை என்பதால்தான் என்னால் தேதியை குறிப்பிட்டு கூறமுடியவில்லை என்றால் சரியல்ல. நானும் எனது

மனைவியும் தெரிந்தும் சுய விருப்பத்தின் பேரில்தான் கிரைய ஒப்பந்த ஆவணத்தை ஏற்படுத்தியுள்ளோம் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை: இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை

தட்டச்சு செய்து அவருக்கு படித்துக்காட்டி

அவர் சரியென்று ஒப்புக்கொண்டு இதில்

கையொப்பமிட்டார்.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2026.02.19 10:40:32 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC),

திருமங்கலம்.